XVC:60

# வ. உ.
# சிதம்பரம் பிள்ளை
# சரித்திரம்

FOR FAVOUR OF REVIEW

SHAKTI KARYALAYAM
24/2/44
G. T. MADRAS

பரலி. சு. நெல்லையப்பர்
எழுதியது

சக்தி காரியாலயம்
சென்னை : : மதுரை

"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ, நாங்கள் சாகவோ?—அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் அல்லமோ. உயிர் வெல்லமோ" என்று சொல்லிய வீரராக, வ. உ. சிதம்பரம் பிள்ளையை வர்ணித்திருக்கிறார் கவி பாரதியார். தேசிய ஆவேசம் ஒன்றே காரணமாய் ஆங்கிலக் கப்பல் கம்பெனிகளுக்குப் போட்டியாய், நாட்டிலே முதன் முதலாக சுதேசிக் கப்பல் ஓட்டி, அதிகாரிகளின் இன்னலுக்காளாகி, பொருளையும் இழக்கும் அஞ்சாத தியாகி அவர். அவர் சரித்திரம் தமிழனுக்கே பெருமை தருவதாகும்.

முதல் பதிப்பு பெப்ருவரி 2, 1944
உரிமை பதிவு செய்யப் பெற்றது

42444-A

விலை அணா பத்து

# அணிந்துரை

மக்கள் வாழ்க்கையில் பெறத்தக்க செல்வங்கள் பல. அவைகளுள் சிறந்தது எது? இதற்குத் தேசபக்தர் வரலாறுகள் செவ்வன் இறை இறுக்கும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒரு பெருந் தேசபக்தர். அவர் தம் வரலாறு அறிவுறுத்துஞ் செல்வம் எது? உரிமை - உரிமைச் செல்வம்.

ஒருவன் பலதிறச் செல்வம் பெற்றிருக்கிறான். ஆனால் அவனிடம் உரிமைச் செல்வம் பொலியவில்லை. அவன் மனிதனாவனோ? ஆகான். உரிமைச் செல்வம் பெற்ற ஒருவனே மனிதனாவன்.

உரிமைச் செல்வம் எளிதில் கிட்டுமோ? கிட்டாது. அதன் தோற்றுவாய் எது? துன்பம் - துன்பம்! சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கை துன்பத்தில் தோய்ந்தது. அவர் ஏற்ற சிறைத் துன்பம் முதலியன வருணனைக்கு எட்டாதன. துன்பம் அவரை உரிமைச் செல்வராக்கிற்று; மனிதரில் மனிதராக்கிற்று. இத்தகைய ஒருவர் வரலாறு உரிமையில்லா நாட்டிற்கு வேண்டற்பாலதே.

இந்நூலாசிரியர் பரலி-சு. நெல்லையப்பர். இவர் சிதம்பரம் பிள்ளையினிடம் மிக நெருங்கி உறவு கொண்டவருள் ஒருவர். நூல் சுருங்கிய முறையில் அமைந்துள்ளது. அது விரிந்த முறையில் வெளிவரல் வேண்டுமென்பது எனது வேட்கை. அதற்குரிய முயற்சி நெல்லையப்பர் மூலம் எழுவதாக.

இந்நூலை அன்புடன் வெளியிட்ட 'சக்தி' நிலையத்தார்க்கு எனது வாழ்த்து உரியதாக.

சென்னை
இராயப்பேட்டை
28—1—1944

திரு. வி. க,



தமிழ்ப்பண்ணை உதவியது

# முன்னுரை

தென்னாட்டுத் திலகரென்று அந்நாளில் பேர் பெற்று விளங்கிய வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை எழுதி வெளியிட வேண்டுமென்ற விருப்பம், சில ஆண்டுகளுக்கு முன் அவர்கள் காலஞ் சென்றவுடனே எனக்குத் தோன்றியது. பல நண்பர்களும் என்னைத் தூண்டினார்கள். பிள்ளையவர்கள் குடும்பத்தாரும் விரும்பினார்கள்.

பிள்ளையவர்கள் இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னேதான், இளமையில் பிள்ளையவர்கள் குடும்பத்தில் ஒருவனா யிருந்தவனும், நான் பிள்ளையவர்கள் பெருநட்பைப் பெறுவதற்குக் காரணமா யிருந்தவனும், எனது வாழ்நாளில் சிறந்த நாட்களை யெல்லாம் செலவிடுவதற்குக் காரணமா யிருந்த லோகோபகாரி பத்திரிகையை நடத்துவதில் எனக்குப் பேராதரவா யிருந்து வந்தவனுமான என் உடன் பிறந்தான் பரலி சு. குழந்தைவேலனை இழக்க நேர்ந்தது. அந்தக் காரணத்தால் எனது வாழ்க்கையில் பெருந்துயரம் விளைந்ததுடன், எனது பத்திரிகைத் தொழிலிலும் பல தொல்லைகள் ஏற்பட்டு, இறுதியில் மிக வருந்தத் தக்க முறையில் நான் லோகோபகாரியுடன் கொண்டிருந்த நெடுந்தொடர்பை விட்டு நீங்கவும் நேர்ந்தது. இந்தச் சரித்திரத்தை, அந்த ஆண்டு சிதம்பரனார் திருநாளைக்குள் வெளியிட வேண்டுமென்ற கருத்துடன் 1940-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே சுருக்கமாக எழுதி முடித்தேன். ஆயினும், பல காரணங்களால் இது இப்பொழுதுதான் வெளியாகின்றது.

பிள்ளையவர்கள் கோயம்புத்தூர்ச் சிறைக்கோட்டத்தில் இருந்த பொழுது, எனது விருப்பத்திற்கு

இணங்கி, தமது சுய சரித்திரத்தைச் சுமார் மூவாயிரம் அடிகள் கொண்ட அகவற் பாவாக எழுதி அனுப்பி னர்கள். அது செய்யுளாயிருப்பினும், எளிய நடையில், எல்லோருக்கும் பொருள் விளங்குவதாய், சுவை யுள்ளதாய் அமைந்திருக்கிறது. தருணம் நேரும் பொழுது அதனையும் வெளியிடக் கருதியுள்ளேன்.

அக்காலத்தில் 'வந்தே மாதரம் பிள்ளை' யென்று பேர் பெற்ற என் தமையனர் பரலி சு. ஷண்முக சுந்தரம் பிள்ளையவர்களும், காலஞ் சென்ற என் தம்பி பரலி சு. குழந்தை வேலனும், அடியேனும் இளமையிலேயே பிள்ளையவர்கள் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களா யிருந்ததுடன் அவர்கள் நடத்திய சுதேசிக் கப்பல் கம்பெனியிலும் பல வகைத் தொண்டுகள் புரியும் பாக்கியம் பெற் றிருந்தோம். 1908-ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் திருநெல்வேலி/பாளையங்கோட்டைச் சிறைக் கோட் டத்தில் இருந்த பொழுது, அவர்களுடன் சில காலம் அங்கு வதியும் பாக்கியத்தைப் பெற்றிருந்ததுடன், அவர்கள் பின்னர்/கோயம்புத்தூர்ச் சிறைக்குள்ளே யிருந்த பொழுது, நான் அதற்கு வெளியே சுமார் ஓர் ஆண்டு தங்கியிருந்து அவர்களுக்கு வேண்டிய திருப்பணி புரியும் பாக்கியமும் பெற்றிருந்தேன். நான் இளமையிலேயே தேசத் தொண்டில் ஈடுபடுவ தற்கும், தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டு அதனைப் பயில்வதற்கும், ஒரு பத்திராசிரியனுவதற்கும், காரணராயிருந்த பெரியாரின் அரிய சரித்திரத்தை நான் எழுத நேர்ந்தமை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை
19—8—43
சுபாநு, ஆவணி 3.

பரலி—சு. நெல்லையப்பன்.

## தோற்றம்

'திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி' யென்று திருஞானசம்பந்தர் முற்காலத்தில் போற்றிப் புகழ்ந்த திருநெல்வேலி நாட்டைப் பிற்காலத்தில் உலகத்தார் போற்றுமாறு செய்த பல பெரியோர்களில் காலஞ்சென்ற திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையும் ஒருவர். திருநெல்வேலி நாட்டிற்கு மட்டுமன்றித் தென்னாடு முழுமைக்குமே அந்நாளில் அரசியல் துறையில் புதிய விழிப்பை உண்டுபண்ணிய பெருமைக்குரிய பெரியோர்களில் சிதம்பரம் பிள்ளை தலைசிறந்தவர்.

திருநெல்வேலி ஜில்லாவில், அக்காலத்தில் கும்பினி/சர்க்காரை எதிர்த்துக் கலகம் செய்து பேர் பெற்ற கட்டபொம்மு நாயகன் அரசாண்ட பாஞ்சாலங்குறிச்சியைத் தனக்கு அருகே கொண்ட ஓட்டப்பிடாரம் என்ற சிற்றூரில், சைவ வேளாளர் குலத்தில், ஆங்கீரச ஆண்டு, ஆவணி மாதம், 22-ம் தேதி வியாழக்கிழமையன்று அஸ்த நட்சத்திரத்தில் (கி. பி. 1872, செப்டம்பர் மாதம் 5-ந் தேதி) சிதம்பரனார் பிறந்தார். அவர் தந்தையார் வ. உலகநாத பிள்ளை, எட்டையபுரம் ஸம்ஸ்தான வக்கீலாக விளங்கினார். முதலில், தான் பிறந்த ஊரிலும், பின்னர் தான் பேரும் புகழும் பெறுவதற்கு உரியதாகத் திகழ்ந்த தூத்துக்குடியிலும், அதற்குப் பின்னர்/ திருநெல்வேலியிலும் சிதம்பரனார்

கல்வி கற்றார். இறுதியில், திரிசிரபுரத்தில் வக்கீல் உத்தியோகத்திற்குரிய கல்வியைக் கற்றார். அக்காலத்தில் ஆங்கிலத்தில் மெட்ரிக்குலேஷன் என்று வழங்கிய வகுப்பு வரை பயின்று அதில் தேர்ச்சி பெற்றார். 1895ம் ஆண்டு, அவர் வக்கீல் பரீட்சையில் தேறினார். இளமையில் நம் சிதம்பரம் பெற்றோர்க்கு அடங்காத முரட்டுப் பிள்ளையாகவே விளங்கினார்.

இளமையிலேயே பொதுநல ஊக்கத்துடன் விளங்கிய சிதம்பரனார், தம் தந்தையார் மேற்கொண்டிருந்த வக்கீல் உத்தியோகத்தையே தாமும் நாடினார். வக்கீல் தொழிலில் பிள்ளையார் பொருள் வருவாய் ஒன்றை மட்டும் கருதாமல், உண்மையில் நியாயவாதியாகவே விளங்கினார். ஏழை மக்கள் வழக்கில் அவர் இலவசமாகவே வேலை செய்வார். அவர் வக்கீலாயிருந்த பொழுது, பொதுஜனங்களைப் பல வழிகளில் வருத்திக் கொண்டிருந்த போக்கிரிகளும், போலீஸ் உத்தியோகஸ்தரும், மற்ற உத்தியோகஸ்தரும் தண்டனை பெறுமாறும், உத்தியோகம் இழக்குமாறும் செய்திருக்கிறார். பிள்ளை வக்கீலாயிருந்த பொழுது, தண்டத்துறையில் (கிரிமினல்) திறமைசாலி என்று பேர் பெற்றதுடன், நல்ல வருவாயும் பெற்று வந்தார். அதனால் அவர் தமிழ்ப் புலவர்களையும் ஏழை மக்களையும் பெரிதும் ஆதரித்து வந்தார். அவரிடம் ஆதரவு பெற்ற புலவர்கள் பலர், அவருக்குப் பாமாலை சூட்டி வாழ்த்தியிருக்கிறார்கள்.

## தமிழாராய்ச்சி

பிள்ளையார் வக்கீலாயிருந்த பொழுதே சைவ சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டதுடன், தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். தமிழில் அவர் பெரிதும் விரும்பிக் கற்றுப் போற்றிய நூல், தெய்வத் தமிழ் மறையென்று வையம் போற்றும் திருக்குறள் ஆகும். சுவாமி வள்ளி நாயகம் என்ற பெரியாருடன் சேர்ந்து 'விவேக பாநு' என்ற வேதாந்த மாதப் பத்திரிகையைப் பிள்ளையார் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் நடத்தினர். 'விவேக பாநு' பின்னர் மதுரையிலும், தென் ஆப்ரிக்கா டர்பன் நகரிலும் சில ஆண்டுகள் நடந்து வந்து, பின்னர் மறைந்து விட்டது.

## சுதேசி

வடக்கே, வங்காளத்தில் வங்காளப் பிரிவினையை ஒட்டி அந்நாளில் தோன்றிய சுதேசி இயக்கம் பிள்ளையார் உள்ளத்தைக் கவர்ந்தது. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருக்கூட்டத்தைச் சேர்ந்த அபேதானந்தர், ராமகிருஷ்ணானந்தர் போன்ற பெரியோர் பழக்கம், பிள்ளை உள்ளத்தில் இருந்த சுதேசி ஊக்கத்தை வளர்த்து விட்டது. அதன் பயனாகப் பிள்ளையார் தூத்துக்குடியில் தரும சங்கம் என்ற நெசவுச் சாலையையும் சுதேசிப் பண்டசாலை ஒன்றையும் நிறுவினர். காங்கிரஸ் இயக்கத்திலும் ஊக்கம் கொண்டு உழைக்கத் தொடங்கினர். சொற்பொழிவு வாயிலாகச் சுதேசிப் பிரசாரமும்

செய்தார். தமிழ் நாட்டில் பொதுக்கூட்டம் கூடிப் பேசும் முறையைப் பிரபலப்படுத்தியவர் பிள்ளையே ஆவார். பிள்ளை திறமையான பேச்சாள ரானமையால், அவர் பேச்சுக்கு நாட்டு மக்களிடம் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது.

நம் தேசத் தலைவர்களில் திலகர் பெருமானிடம் பிள்ளைக்குத் 'தெய்வபக்தி' ஏற்பட்டிருந்தது. 1907-ம் ஆண்டு சூரத்நகரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு, ஸ்ரீமான் பிள்ளை இப்பொழுது புதுவையில் ஸ்ரீ அரவிந்தாசிரம வாசியா யிருக்கும் பெரியாரான சென்னை வக்கீல் எஸ். துரைசாமி ஐயர், காஞ்சி வரதாச்சாரியார், கவி சுப்ரமணிய பாரதியார், வி. சர்க்கரைச் செட்டியார் முதலிய பல நண்பர்களுடன் சென்றார். அங்கே நடந்த ஒரு சமரச ஏற்பாட்டில், தென்னாட்டு மிதவாதிகள் கூட்டத்தின் தனிப் பிரதிநிதியாக, காலஞ்சென்ற சென்னைச் செல்வர் வி. கிருஷ்ணா சுவாமி ஐயரையும், அமிதவாதிகள் என்ற தீவிர தேசபக்தர் திருக்கூட்டத்தின் பிரதிநிதியாக நமது சிதம்பரனாரையும் தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அவருக்கு அந்நாளில் ஏற்பட்டிருந்த பெருமதிப்பைச் சொல்ல வேண்டுமா?

## சுதேசிக் கப்பல் கம்பெனி

தூத்துக்குடி தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். தென்னாட்டிலிருந்து இலங்கைக்குச் செல்லும் பிரயா

ணிகளும் சரக்குகளும் அக்காலத்தில் தூத்துக்குடி வழியாகவே கப்பல் ஏறிச் செல்ல வேண்டும். எனவே, அது பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கியது. தென்னாட்டுச் சரக்குகளைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்து அனுப்பும் வியாபாரிகள் அங்கே மிகுதி. ஆனால், ஆங்கில (B. I. S. N. Coy.) கப்பல் கம்பெனியார் தூத்துக்குடிச் சுதேசி வியாபாரிகளை மதியாமல் தாங்கள் இட்டதே சட்டம் என்று காரியம் நடத்தி வந்தார்கள். சுதேசி வியாபாரிகள் பிள்ளையாரிடம் முறையிட்டார்கள். விதேசிக் கப்பல் கம்பெனி முதலாளிகளின் அநியாயங்களையும், சுதேசி வியாபாரிகளின் குறைகளையும் கண்ட பிள்ளை, தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்குவதென்று முடிவுசெய்தார். தென்னாட்டு வியாபாரிகள், செல்வர்கள், தேசபக்தர்களின் ஆதரவு பெற்றுப் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கிவிட்டார். பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்சரூபாய் மூலதனத்துடன் சுதேசிக் கப்பல் கம்பெனி* 1905-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1906-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 16-ந் தேதி கம்பெனி பதிவு செய்யப்பட்டது.

முற்காலத்தில் கப்பலோட்டிக் கடாரத்தை வென்ற தமிழ்நாட்டில், ரோமாபுரிக்கு முத்தும் பவளமும் மிளகும் அனுப்பிய தமிழ்நாட்டில், சாவகத்திலும் காம்போஜத்திலும் சைவமும்

* Swadeshi Steam Navigation Company

வைணவமும் தமிழும் கமழுமாறு செய்த தமிழ் நாட்டில் பிற்காலத்தில் முதல் முதல் கப்பலோட்டிய பெருமை சிதம்பரனாரைச் சேர்ந்தது. பெருஞ் செல்வராயின்றிச் சிறிய வக்கீலாயிருந்த பிள்ளை, அக்காலத்தில் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவிய செயல் செயற்கரும் செயலென்றே சொல்லவேண்டும். காலஞ்சென்ற பாலவநத்தம் ஜமீன்தாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான உயர் திருவாளர் பாண்டித்துரைத் தேவரும், தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் பெருஞ்செல்வராக விளங்கும் கோபாலசாமி நாயுடு குடும்பத்தாரும், தூத்துக்குடியில் பெருஞ் செல்வராக விளங்கும் சி. வ. குடும்பத்தாரும் வேறு சில செல்வர்களும் கப்பல் கம்பெனி ஏற்படுத்துவதில் பிள்ளைக்குப் பேராதரவு புரிந்தவர்கள். வந்தே மாதர முழக்கமும், சுதேசி இயக்கமும் உச்ச நிலையில் இருந்த அக்காலத்தில், தென்னாட்டு மக்கள் மட்டுமன்றி, பாரத தேசத்தின் பல பகுதிகளிலும் உள்ள மக்களும், அலைகடலுக்கப்பால் தொலைநாடுகளில் வாழும் இந்திய மக்களும் தேசபக்தி உணர்ச்சி மிகுந்தவர்களாய், சுதேசிக் கப்பல் கம்பெனியில் பங்கெடுத்துக்கொண்டு, அதற்குப் பேராதரவு புரிந்தார்கள். சோழ நாட்டிலும் பாண்டி நாட்டிலும், பல தாய்மார்கள் கூடச் சிதம்பரனார் மீது 'தெய்வ பக்தி' கொண்டவர்களாய், தங்கள் வாழ்நாளில் சேர்த்து வைத்திருந்த

பொருள்களைச் சுதேசிக் கப்பலுக்கென்று உதவினார்கள்.

## போட்டி

சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று தோன்றிய விஷயம், அதுவரை தனியரசு செலுத்தி வந்த விதேசிக் கப்பல் கம்பெனியாருக்கும் அவர்களை ஆதரித்துவந்த அதிகாரிகளுக்கும் பொறாமையையும் கோபத்தையும் விளைத்தது. எனவே, குழந்தைப் பருவத்தில் இருந்த சுதேசிக் கப்பல் கம்பெனியைக் கொல்லுவதற்கு அவர்கள் வழி தேடினார்கள். விதேசிக் கம்பெனியார் ஜனங்களுக்கும் சரக்குகளுக்கும் ஏற்பட்டிருந்த கப்பல் கட்டணங்களைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்கினார்கள். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஐந்து ரூபாயாக ஏற்பட்டிருந்த (மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள்) கட்டணம், முக்கால் ரூபாய்வரை இறங்கிய தென்றால் போட்டியின் கடுமையைச் சொல்ல வேண்டுமா? நூற்றுக் கணக்கான கப்பல்களுடன், பல துறைமுகங்களில் பல ஆண்டுகள் "தனிக்காட்டு ராஜா"வாகக் கொள்ளை லாபம் திரட்டிவந்த விதேசிக் கம்பெனியார் இலவசமாகக்கூட ஆட்களை ஏற்றிச்செல்லலாம். ஆனால் இரண்டே கப்பல்களுடன், குழந்தைப் பருவத்தில் இருந்த சுதேசிக் கம்பெனிக்கு இந்தப் போட்டி மிகவும் கொடுமையாக இருந்தது. ஆயினும், சுதேசிக் கம்பெனி தைரியமாக வேலை செய்துவந்தது. இந்த நிலையில் கப்பல் கம்

பெனிக்கு 'உயிர்'ராக விளங்கிய பிள்ளையை எவ்வாறாயினும் அடக்கிவிட வேண்டுமென்று எதிர்க்கட்சியாரும், அவர்களுக்கு ஆதரவாயிருந்த அதிகாரிகளும் முயன்றார்கள். அவருக்கு பயமாகவும் பயமாகவும் யோசனை கூறினார்கள். அந்நாளில் பிள்ளை பிறரது நயவார்த்தைகளுக்கு இணங்கியிருந்தாரானால், அவர் மிகப் பெரிய செல்வராயிருந்தல் கூடும். அவருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட வறுமை ஏற்பட்டிராது. ஆனால் பிள்ளை உறுதியுடன் நின்றார்.

## தொழிலாளர் கிளர்ச்சி

தூத்துக்குடியில், கோரல் மில்ஸ் என்ற ஹார்வி கம்பெனியாரின் பருத்தி ஆலையில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வேற்றுமை ஏற்பட்டது. அதன் பயனாகத் தென்னாட்டிலே முதல் முதலாகத் தூத்துக்குடியில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதில் பிள்ளை தலையிட்டுச் சமரசம் செய்ய முயன்றார். வேலையற்றிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆதரிக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது. செல்வர்களிடமும் ஏனைய பொது ஜனங்களிடமும் பொருள் சேர்த்து அவர்களுக்கு ஆதரவு புரிந்தார்.

## சுதேசிக் கிளர்ச்சியின் உச்ச நிலை

அந்நாளில் தூத்துக்குடியில் சுதேசி கிளர்ச்சி உச்ச நிலையில் இருந்தது. சுதேசி

இயக்கத்திற்கு விரோதமாக இருந்த மனிதர் களைப் பொதுஜனங்கள் பகிஷ்காரம் செய்ய முற்பட்டார்கள். தூத்துக்குடியில் வக்கீலா யிருந்த பிராமண நண்பர் ஒருவருக்கு மருத் துவ சகோதரன் ஒருவன் க்ஷவரம் செய்து கொண்டிருந்த பொழுது, ஐயங்கார் சிதம்ப ரரின் சுதேசி ஊக்கத்தைப் பெரிதும் இகழ்ந்து பேசினர். க்ஷவரம் செய்து கொண் டிருந்த மருத்துவ சகோதரன் உடனே கத்தியை மடக்கிப் பெட்டியில் வைத்துவிட்டு ஐயங்காரை அரைகுறை க்ஷவரத்தில் விட்டு விட்டுப் போய்விட்டான். ஐயங்கார் சுவாமிகள் அன்று இரவே போலீஸ் காவலுடன் மதுரைக் குப் புறப்பட்டுச் சென்று, மறுநாள் காலையில் தமது திருப்பதி க்ஷவரக் கோலத்தை நீக்க வேண்டியதாயிற்று! வங்காளத்து நவமணி களில் ஒருவரான காலஞ்சென்ற அஸ்வினி குமார தத்தரின் தலைமையில் பாரிசால் நகரம் சுதேசி ஊக்கத்தில் வங்காளத்திலேயே சிறந்து விளங்கியது. (சுதேசி ஊக்க மிகுதியால் பாரிசா லில் பரதேசித் துணி கிடைப்பது அரிதாய் விட்டது. அக்காலத்தில் பாரிசாலில் இருந்த ஜில்லாக் கலெக்டருக்கு ஒரு கஜம் மல் வேண் டியதா யிருந்தது. அஸ்வினி குமார தத்தர் உத்தரவு கொடுத்த பின்னரே கலெக்டருக்கு ஒரு கஜம் பரதேசி மல் துணி கிடைத்ததாம்). சிதம்பரம் பிள்ளை தலைமையில் சிறந்து விளங்கிய தூத்துக்குடியைத் தென்னாட்டு பாரிசால் என்று தேச மக்கள் போற்றினர்கள்.

## அடக்கு முறை

சிதம்பரம் பிள்ளையை எவ்வாறாயினும் அடக்கிவிட வேண்டுமென்று காலம் பார்த்திருந்த அக்கால அதிகாரிகள், அவரது பேச்சுகளால் தூத்துக்குடியில் குழப்பம் விளையுமென்று கூறி அவர்மீதும் அவரது நண்பர்களாகிய சுப்ரமண்ய சிவம், பத்மநாப ஐயங்கார் இருவர் மீதும் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் முன் ஜாமீன் வழக்குத் தொடர்ந்தார்கள். தூத்துக்குடியில் இருந்த பரதேசி வியாபாரிகளும் சிதம்பரம் பிள்ளையின் முயற்சிகளால் ஆபத்து விளையுமென்று கூறி அதிகாரிகளிடம் முறையிட்டு வந்தார்கள். ஊருக்குள் இருந்தால் தங்கள் உயிருக்கே இறுதி நேருமென்று கூறித் துறைமுகத்திலிருந்து ஆறு மைலுக் கப்பால் நடுக் கடலில் கிடக்கும் கப்பல்களில் இராக் காலத்தைக் கழிக்கத் தொடங்கினார்கள்! இதையெல்லாம் கண்ட அதிகாரிகள் பிள்ளை மீது (9-3-1908ல்) ஜாமீன் வழக்கு தொடர்ந்தார்கள். அது பயனற்றுப் போகவே, அந்த வழக்கு நடந்துகொண்டிருந்த பொழுது, திருநெல்வேலி ஆற்றங்கரையில் கூடிய கூட்டத்தில் வங்காளத்துப் பெரியாரான விபின சந்திர பாலர் விடுதலைத் திருநாளன்று பேசிய பேச்சில் ராஜத்துவேஷம் அடங்கியிருந்ததாகப் பிள்ளை மீதும் காலஞ்சென்ற சுப்ரமணிய சிவா மீதும் வழக்குத் தொடர்ந்தார்கள். அச் சமயத்தில்

சென்னையில் இந்தியாப் பத்திரிகையை நடத்தி வந்த ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் வந்தார்.

சிதம்பரனார் வழக்கு திருநெல்வேலி ஜில்லாவில் மட்டுமல்ல, தென்னாட்டில் மட்டுமல்ல, காஷ்மீரத்தி லிருந்து கன்னியா குமரி வரை தேசமெங்குமே பெரியதோர் விழிப்பை உண்டு பண்ணியது. இந்த வழக்கு விசாரணைக் கென்றே தனி நீதிபதியாக ஏற்பட்ட பின்னே துரை,* பிள்ளைக்கு இரு குற்றங்களுக்காக இரு முறை ஆயுள் பரியந்தம் தீவாந்தர தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருஷம் தீவாந்தர தண்டனையும் (1908ம் ஆண்டு ஜூலை மாதம்) விதித்தார். இந்த வழக்கு சுமார் நான்கு மாத காலம் நடந்தது. இதில் ஸ்ரீமான் சுப்ரமணிய சிவனார் கொடுத்த வாக்கு மூலம் நமது தேசத்தின் விடுதலைச் சரித்திரத்தில் இடம் பெறுதற் குரியது. இந்தக் கொடிய தண்டனையால் நாடு முழுமையும் கலங்கியது. இந்தத் தண்டனை, அக்காலத்தில் லண்டனில் இந்தியா மந்திரியாக விளங்கிய ஜான் மார்லியைக் கூடக் கலக்கியதாம். சிதம்பரம் பிள்ளைக்கு இரட்டைத் தீவாந்தர தண்டனை விதித்த ஜில்லா நீதிபதி பின்னே துரை, அடுத்தபடியாக (சென்னை ஐக்கோர்ட்) உயர்தர மன்ற நீதிபதியாக உயர்ந்து, சில காலம் பதவியில் இருந்தார். ஆனால், சில காலத்திற்குள் அவர்

* Mr. A. F. Pinhey, Additional Sessions Judge

தமது பெரிய பதவியையும், ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தையும் அறவே விட்டு விட்டுத் தாய் நாடு செல்ல நேர்ந்தது. அதற்குக் காரணம், சிதம்பரம் பிள்ளை விஷயத்தில் பின்னே துரை மேற்கொண்ட கொடிய நீதி முறையைப் பற்றி இந்தியா மந்திரி கொண்ட வெறுப்பே யென்று ஆங்கில அரசாங்கத்தின் "மூலஸ்தான" விவகாரங்களை அறிந்தவர்கள் அந்நாளில் சொல்லிக்கொண்டார்கள்.

பின்னே துரையின் அநியாயத் தீர்ப்பை மாற்றுமாறு ஐக்கோர்ட்டிற்கு அப்பீல் செய்யப்பட்டது. பிள்ளையவர்கள் வழக்குச் செலவுக்காகப் பொருளுதவி நாடி அவரது மனைவியார் செய்த விண்ணப்பத்திற்கு இணங்கித் தேசத்தார் பேராதரவு புரிந்தனர். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களேயன்றி, இலங்கை, தென் ஆப்ரிக்கா முதலிய நாடுகளில் குடியேறி வாழும் தமிழர்களும், பாரத தேசத்தில் வாழும் மக்களே யன்றி, பூலோகத்தின் பல பகுதிகளிலும் வாழும் இந்திய மக்களும் ஆதரவு புரிந்தார்கள்.

## சிறை வாசம்

சிதம்பரம் பிள்ளைக்கு ஏற்பட்ட ஆயுள் பரியந்தம் தீவாந்தர தண்டனையை ஆறு ஆண்டுச் சிறைவாசமாக ஐக்கோர்ட்டார் குறைத்தார்கள். நன்னடத்தைக் கழிவு, அரசாங்க வஜா முதலியன கழித்துப் பிள்ளை சுமார் நாலரை ஆண்டுகள் சிறை வாசம் செய்தார்.

முதலில் கோயம்புத்தூர்ச் சிறையிலும், பின்னர் மலையாளத்தில் உள்ள கண்ணனூர்ச் சிறையிலும் பிள்ளை தமது சிறை வாசத்தைக் கழித்தார்.

கோவைச் சிறையில் அரசியற் கைதியாக இருந்து மாடுபோலச் செக்கிழுக்கும் பெருமை, முதல் முதலாகச் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கே கிடைத்தது. பின்னர், சுமார் பதினாறு ஆண்டுகள் கழித்து அதே சிறைக் கோட்டத்தில் அந்தப் பெருமையை அடைந்தவர் சேலம் செல்வரான ஸ்ரீமான். எம். ஜி. வாசுதேவய்யா ஆவார். கல்வியறிஞரும் தேச பக்தருமான திருவாளர் பிள்ளைக்குச் செக்கிழுக்கும் வேலையைக் கொடுத்த செய்தியை அறிந்த தேச பக்தர்கள் கொதிப்படைந்தார்கள். பிள்ளையார் மீது ஆதியில் அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தது பற்றிக் கொதிப் படைந்த திருநெல்வேலி மக்கள் கலகம் விளைத்தது போலவே, கோயம்புத்தூர்ச் சிறையில் அதிகாரிகள் பிள்ளையையும் மற்றவர்களையும் கொடுமையாக நடத்தியது பற்றிக் கொதிப்படைந்த கைதிகள் கலகம் விளைத்தார்கள். இந்தக் கலகத்தை யொட்டி ஏற்பட்ட வழக்கில், திருவாளர் பிள்ளை சிறைக் கோலத்துடன் சென்று கோவை ஜில்லா நீதி ஸ்தலத்தில் கொடுத்த சாட்சியம் குறிப்பிடத் தகுந்தது.

திருவாளர் பிள்ளை சிறைவாசம் செய்ய நேர்ந்த காரணத்தால் தென்னாட்டில் உள்ள

சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளுக்கெல்லாம் நல்ல காலம் பிறந்தது. சிறைக் கைதிகளுக்கு வேலை கொடுக்கும் முறையிலும், உணவு கொடுக்கும் முறையிலும் சீர்திருத்தம் ஏற்படுமாறு காலஞ்சென்ற சென்னைச் சட்ட சபை அங்கத்தினர் குத்தி கேசவப் பிள்ளை சட்ட சபை வாயிலாகப் பெரிதும் போராடினர். காட்டிலாகா ஊழல்களையும், சிறைச்சாலை ஊழல்களையும் ஒழிப்பதிலேயே அவர் நாளெல்லாம் உழைத்து வந்தார். அந்தக் காரணத்தால், கேசவப் பிள்ளை ஒன்று காட்டில் இருப்பார், அல்லது சிறையில் இருப்பார் என்று நண்பர்களும் அதிகாரிகளும் விகடமாகக் கூறுவது உண்டு.

## தமிழ்த் தொண்டு

தேசத்தொண்டு காரணமாகச் சிறைக் கோட்டம் புகுந்த சிதம்பரம் பிள்ளை, சிறைக் கோட்டத்தில் ஓய்ந்த நேரங்களில் தாம் இளமை முதலே ஆர்வம் கொண்டிருந்த தமிழ்த் தொண்டில் சித்தம் செலுத்தி வந்தார். ஆங்கில நாட்டு ஞானியான ஜேம்ஸ் ஆலன் என்பார் இயற்றிய சில அரிய நூல்களை மனம்போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் என்ற பேர்களுடன் மொழி பெயர்த்தார். வேறு சில தமிழ் நூல்களையும் இயற்றினர். இவற்றுள், மனம்போல வாழ்வு பிள்ளையவர்கள் சிறையில் இருந்த பொழுதே, "இந்தப் புஸ்தகத்தின் காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும்

சுதேசியம்" என்ற குறிப்புடன் வெளியாயிற்று. மற்ற நூல்களைப் பிள்ளையவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் வெளியிட்டார். பொதுமறையான திருக்குறளை நன்றாக ஆராய்ச்சி செய்வதற்குரிய தருணம் அவருக்குச் சிறைக்கோட்டத்தில் கிடைத்தது. திருக்குறள் மீது சிதம்பரனாருக் கிருந்த ஆர்வம் சொல்லும் தரத்தன்று. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறளையும் பாயிரத்தோடு படியாத ஆண் மகனோ பெண் மகளோ தமிழ் நாட்டில் இருத்தல் ஆகா தென்றும், தமிழ் வேதமான திருக்குறளைப் படியாத தமிழ் மக்கள் தமிழ் மக்கள் ஆகார் என்றும் பிள்ளையவர்கள் அழுத்தமாகக் கூறுவது வழக்கம்.

## விடுதலை

சுமார் நாலரை ஆண்டுகள் சிறைக்கோட்டத்தில் இருந்த பிள்ளை 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விடுதலை அடைந்தார். விடுதலை அடைந்தவுடன் பிள்ளை, குடும்பத்துடன் நேரே சென்னைக்கு வந்தார். சென்னை நகரத்திற்கு நடுநாயகமாக விளங்கும் சிந்தாத்திரிப்பேட்டையில் அருணாசல நாயகன் வீதியில் சுமார் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். பின்னர் சிலகாலம் திருமயிலையிலும், பிரம்பூரிலும் வாழ்ந்திருந்தார். பிள்ளை விடுதலை அடைந்து வந்தபொழுது, சென்னையிலுள்ள தலைவர்களில் பலரும் அவரைத் 'தீண்டாதாரா' கவே கருதினர்கள். திலகர் பெருமான் தமது சுய

ராஜ்ய நிதியிலிருந்து மாதந்தோறும் அனுப்பி வந்த ஐம்பது ரூபாயே அவருக்குப் பெரிய ஆதரவாயிருந்தது. பிரம்பூரில் இருந்தபொழுது பிள்ளை தமது குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் கூடச் செய்து பார்த்தார். சில காலம் தமிழ்ப் பத்திரிகைகளில் ஆசிரியராகவும் இருந்தார்.

பிள்ளை சென்னையில் வாழ்ந்துவந்த பொழுது பலருக்குத் தமிழ்க் கல்வி பயிற்றி வந்தார். பிள்ளையாரிடம் திருக்குறள் பயின்றவர்களில், இப்பொழுது சிதம்பரம் நந்தனர் மடத்துத் தலைவராக விளங்கும் சகஜானந்த சுவாமியாரையும், லோகோபகாரி பத்திராசிரியரா யிருந்த பரலி-சு. நெல்லையப்பரையும் குறிப்பிடலாம். பிள்ளை சென்னையை அடுத்த பிரம்பூரில் இருந்த பொழுது, அங்கு வாழ்ந்து வந்த பெருந் தமிழறிஞரான திருமணம் செல்வ கேசவராய முதலியாருடன் தமிழாராய்ச்சி செய்துவந்தார். திருக்குறள் மணக்குடவர் உரையை வெளியிட்டதுடன், திருக்குறளுக்குத் தாமே புதிய உரை ஒன்றையும் இயற்றி வெளியிட்டார். பழந்தமிழ் இலக்கியமான தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திற்கு, உரையாசிரியர் இளம்பூரணர் எழுதிய கிடைத்தற்கரிய உரையையும் பிள்ளை பிற்காலத்தில் வெளியிட்டார். இன்னிலை என்ற பழந்தமிழ் நூலையும் அவர் வெளியிட்டிருக்கிறார். சுதேசிக் கிளர்ச்சி தூத்துக்குடியில் மும்மரமாயிருந்த

பொழுது பரலி-சு. ஷண்முகசுந்தரம் பிள்ளை யைப் பத்திராசிரியராகக் கொண்டு, 'சுயராஜ்யம்' என்ற பத்திரிகையைத் தொடங்க விரும்பி, அதற்குரிய முன்னேற்பாடுகளெல் லாம் செய்தார். முதல் இதழில் வெளியிடுவதற் காக எழுதிய உணர்ச்சி மிக்க தலையங்கக் கட்டுரை இன்னும் என் நினைவில் இருக்கிறது. ஆனால் பத்திரிகை தொடங்கு முன்பே அவர் மீது வழக்குத் தொடங்கிவிட்டதால் பத்திரிகை நின்றுவிட்டது. பிள்ளை சிறை சென்று மீண்ட பின், இந்தியாவின் நியாயம் உலகத்தாருக் கெல்லாம் விளங்குமாறு உலகத்திலுள்ள நாற்பது முக்கிய பாஷைகளில் பத்திரிகை வெளியிட வேண்டுமென்று கருதினர்! இக் கருத்து அக்கால நிலையில் முடியாமற் போயி னும் அவரது பெரு நோக்கம் கருதற்பாலது.

பிள்ளை சிறையிலிருந்து வெளிவந்த பொழுது அரசியல் உலகம் அமைதியுற்றிருந் தது. அப்பொழுது திலகர் சுயராஜ்ய சங்கம் தோன்றியது. அதில் பிள்ளை சேர்ந்து உழைத் தார். சென்னையில் தொழிலாளர் இயக்கத் திலும் சேர்ந்து வேலை செய்தார். சென்னையில் தொழிலாளர் மிகுதியாக வாழும் பெரம்பூர்ப் பட்டாளத்தில் '**சிதம்பரம் பிள்ளை** (அவென்யூ) **சாலை**' ஒன்றும், விளையாட்டு மைதானம் ஒன்றும் ஏற்பட்டிருப்பதே அதற்குச் சான்று. சில காலம் கோயம்புத்தூர்த் தொழிலாளர் **சங்கத்திலும் அவர் வேலை செய்தார்.**

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பிள்ளைக்கு அதிக நம்பிக்கை இல்லை. ஆயினும் அந்த இயக்கத்திற்கு மாறாக அவர் எதுவும் செய்யவில்லை. அவர் தமக்குச் சரியென்று தோன்றிய வழிகளில் தேசத் தொண்டு செய்துவந்தார்.

## மீண்டும் வக்கீல்

வக்கீல் தொழிலில் விருப்ப மற்றவரும், 'வக்கீலாய் நின்று வழிப்பறியே செய்கின்ற திக்கிலார்' என்று பாடியவருமான சிதம்பரம் பிள்ளை, தமது குடும்ப நிலை காரணமாக அதிகாரிகள் அநுமதிபெற்று 1922-ம் ஆண்டு மீண்டும் வக்கீல் ஆனார். தூத்துக்குடியிலும் பின்னர் கோவிற்பட்டியிலும், கடைசியாக மீண்டும் தூத்துக்குடியிலுமாக சுமார் பத்தாண்டுகள் வரை அவர் வக்கீல் தொழில் புரிந்தார். பிள்ளை கோவிற்பட்டியில் இருந்த பொழுது, ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப் பட்டிருந்த ஸ்ரீமான்களான எம். எஸ். சுப்ரமணிய ஐயர், என். சோமயாஜுலு முதலிய இளந் தேசபக்தர்களுக்கு உண்டி, உடை அளித்து ஆதரித்ததுடன், அவர்களுக்காக நீதிஸ்தலத்தில் வலியத் தோன்றி வாதித்த செய்தியைத் தமிழ் நாட்டார் மறந்திருக்க மாட்டார்கள். பிள்ளை தூத்துக்குடியில் வக்கீலாயிருந்தபொழுது, ஊக்கமும் உழைப்பும் உரு வெடுத்தது போல விளங்கிய அவருடைய மூத்த மகன் உலகநாதன் தனது இருபதாவதாண்டில்

காலஞ் சென்றான். அதனால் அவர் குடும்பத்திற்குத் தீராத துயரமும் நஷ்டமும் விளைந்தன.

## இறுதி

பிள்ளை சிறந்த உடற்கட்டுடையவ ராயினும், ஐந்தாண்டு அநியாயச் சிறைவாசம் அவர் உடல்நலத்தைப் பெரிதும் கெடுத்து விட்டது. சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர், வருவாயின்றி வறுமையில் வருந்த நேர்ந்தது. 1932-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் தேதி பிள்ளையின் அறுபதாண்டு நிறைவு விழா நடந்தது. அதனையொட்டி, அவரிடம் தேசமக்களுக்குள்ள நன்றியறிதலுக்கு அறிகுறியாக அவருக்கு ஒரு பணப்பை அளிக்க வேண்டுமென்று டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலிய நண்பர்கள் முயன்றார்கள். அந்த நிதிக்குப் பல நண்பர்கள் மனமுவந்து பொருளுதவி புரிந்தார்களாயினும், அதற்குப் போதிய அளவு பொருள் சேரவில்லை. பிள்ளையின் தேசத்தொண்டைத் தற்காலத் தமிழ் மக்கள் மறந்துவிட்டமையே அதற்குக் காரணம். பெரியோர்கள் இந்த உலகத்தில் இருக்கும்பொழுது அவர்களை ஏறிட்டுப் பாராமல், அவர்கள் இறந்த பின்னர், அவர்களைப்பற்றி வியந்தோதித் திருவிழாக் கொண்டாடும் வழக்கம் தற்காலத் தமிழ்நாட்டில் மிகுதியா யிருக்கிறது. எனவே, தேசத்திற்காகப் பல வித அரிய தியாகங்கள் செய்த சிதம்பரம் பிள்ளையும், கவி சுப்பிரமணிய

பாரதியாரும் பிறரும் அவர்கள் வாழ்நாளில் வறுமையில் வருந்த நேர்ந்தமை வியப்பாகாது. முதுமையும் நோயும் வறுமையும் வருத்த, பிள்ளை தாது ஆண்டு கார்த்திகை மாதம் நாலாம் தேதி (18-11-36) புதன்கிழமையன்று வறுமையும் சிறுமையு மற்ற பெரிய உலகம் புகுந்தார். பிள்ளையார் இவ்வுலக வாழ்வு நீத்த பொழுது அவருக்கு வயது அறுபத்தைந்தே.

## குண நலம்

சிதம்பரம் பிள்ளை தேசபக்தியில் சிறந்தவர். தியாக புத்தியில் உயர்ந்தவர். பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய், அஸ்வினி குமார தத்தர் முதலிய உத்தம தேச பக்தர்கள் திருக்கூட்டத்தில் அவர் சேர்தற்கு உரியவர். அவர் தமிழ் அன்பர்; தமிழ் அறிஞர். பெருங் கவிஞரல்ல ராயினும், அவர் தமிழ்க் கவி. தமிழ் வளர்ப்பதை அவர் தமது வாழ்நாளில் பெருங் கடமையாகக் கொண்டிருந்தார். சைவத்தில் உறுதியான பற்றுக் கொண்டிருந்தார். சைவ சமயமும் சைவ உண வியக்கமும் வையத்திற்கு உய்வளிக்கத் தகுந்தன என்பது பிள்ளை கருத்து. ஆயினும் அவர் ஜாதி, சமய வேற்றுமை யற்ற சமரச வாதி. அவர் அன்பிலும் ஜீவகாருண்யத்திலும் சிறந்து விளங்கினர். விருந்தோம்பல் என்ற சிறந்த குணம் அவரிடம் சிறந்து விளங்கியது. ஆதியில் வக்கீல் தொழில் செய்து வருவாய் மிகுந்து விளங்கிய காலத்திலும், பிற்காலத்தில் அவர்

சிறையிலிருந்து வந்த பின்னர் வருவாய் குறைந் திருந்த காலத்திலும் பிள்ளை வீடு 'சத்திரம்' ஆகவே விளங்கியது. மேன்மக்களிடம் சிறந்து விளங்க வேண்டிய உயர் குணங்கள் பல அவ ரிடம் சிறந்து விளங்கின. பேரன்பும், பேரூக்க மும், பேருழைப்பும் பெருந் தியாகமும் கொண்ட பெருந் தமிழராகப் பிள்ளையார் விளங்கினர். பெருந் தமிழர் திருக்கூட்டத்தில் அவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினர்.

நன்றியறிதல் என்ற சிறந்த குணம் பிள்ளையாரிடம் சிறந்து விளங்கியது. ஆதியில் சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கும் முயற் சியில் தம்முடன் உடனின்று உழைத்த தூத் துக்குடி வியாபாரியான காலஞ்சென்ற சித. ஆறுமுகம் பிள்ளையவர்கள் பேரை அவர் தம் இரண்டாவது புதல்வருக்கு இட்டார். பிள்ளை யார் சிறைக் கோட்டத்தில் இருந்த பொழுதும் விடுதலை அடைந்த பின்னரும், அவருக்குப் பொருளுதவி புரிந்து வந்த தென் ஆப்பிரிக்காச் செல்வரான தில்லையாடி வேதியப் பிள்ளை யென்ற நண்பரின் பேரைத் தம் இரண்டாவது புதல்விக்கு இட்டார். (வேதவல்லி யென்ற இப் புதல்வியும் அதன் தமக்கையான ஞானம்பாளும் மண வாழ்க்கையில் வாழ்ந்திருந்து சில நன்மக் களைப் பெற்றுச் சில ஆண்டுகளுக்கு முன் இள வயதில் காலஞ் சென்றனர்) பிள்ளையவர்கள் கோவைச் சிறைக் கோட்டத்தில் இருந்த பொழுது, அவருக்கு அரும் பெருந்துணைவராக

அமர்ந்த கோவைப் பெரியாரான திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் பேரைத் தம் மூன்றாம் புதல்வருக்கு இட்டார். வக்கீலாயிருந்த பிள்ளையவர்கள் சிறைக் கோட்டம் சென்று வெளிவந்த பின், அரசியல் குற்றம் செய்தவர்களுக்கு வக்கீல் உத்யோகம் கிடைப்பது அரிதாயிருந்தது. பிள்ளையவர்கள் விரும்பிய காலத்து அவருக்குத் திரும்பவும் வக்கீல் உத்யோகம் கிடைக்குமாறு செய்த சென்னை ஐக்கோர்ட் நீதிபதி வாலிஸ்* துரையின் நினைவைப் போற்றுமாறு தமது கடைசிப் புதல்வருக்கு வாலீசுரன் என்று பேரிட்டார். பிள்ளை பெற்றுப் பேரிடுதல் என்பதைத் தமிழ் நாட்டார் பெரு நன்றிக்கு அறிகுறியாகக் கூறுவர். பிள்ளையார் அக் கூற்றை மெய்ப்படுத்தினர்.

## நாட்டு மக்கள் நன்றி

சுதேசி யென்றும், சுயராஜ்யம் என்றும் சொல்லவும் மக்கள் அஞ்சியிருந்த தென்னாட்டில், வந்தே மாதரம் என்று வாயால் சொல்லவும் அஞ்சி யிருந்த தமிழ் நாட்டில் சுதேசி முழக்கமும் வந்தே மாதர முழக்கமும் செய்து சுயராஜ்ய உணர்ச்சியை எழுப்பிய பெருந்தலைவரான பிள்ளையவர்கள் விஷயத்தில் தமிழ் மக்கள் போதிய அளவு நன்றி காட்டவில்லை யென்பது உண்மையே. பிள்ளை யவர்களின் பெருந் தொண்டை அறிந்த முதியவர்கள் அதனை மறந்து விட்டார்கள். இளைஞர்கள்

* Sir John Wallis

அதனை அறிய மாட்டார்கள். ஆயினும் பிள்ளையவர்களைத் தமிழ் நாட்டார் முற்றிலும் மறந்து விடவில்லை. சென்னையில் பிள்ளையார் தொழிலாளர் நலத்திற்காக உழைத்ததை நினைவூட்டும் பொருட்டுப் பெரம்பூர்ப் பட்டாளத்தில் சிதம்பரம் பிள்ளை சாலையும் விளையாட்டு நிலையமும் ஏற்பட்டிருப்பதை முன்னரே கூறியிருக்கிறோம். சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியாரும் சில ஆண்டுகளுக்கு முன் பிள்ளையவர்கள் முக உருவச்சிலை (Bust) ஒன்றை நிறுவித் தாங்களும் அவரை மறந்துவிடவில்லையென்பதைக் காட்டிக் கொண்டார்கள். வேலூர் நகரசபையார் தங்கள் சபை மண்டபத்திற்குச் சிதம்பரம் பிள்ளை மண்டபம் என்று பேரிட்டுச் சிறந்த முறையில் தங்கள் நன்றியை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் வேறு பல இடங்களிலும் சிதம்பரனார் பேரால் சங்கங்களும் வாசகசாலைகளும் புத்தகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

ஆனால், பெரியோர்களுக்கு நன்றிகாட்டுவதென்பது ஞாபகச் சின்னங்களில் அடங்கியிருக்கவில்லை. அப்பெரியார்களின் அரிய நோக்கங்களை அறிந்து, அவற்றில் ஊக்கம்கொண்டு உழைத்து, அவற்றை நிறைவேற்ற முயல்வதே அவர்களுக்கு உண்மையான முறையில் நன்றி காட்டுவதாகும். வீரத் தமிழராகவும், விடுதலை வீரராகவும் விளங்கிய சிதம்பரம் பிள்ளையின் நினைவைப் போற்ற விரும்

பும் தமிழ் மக்கள் தேசம் பல துறைகளிலும் விடுதலை பெறுதற்குரிய நெறியில் உழைக்க வேண்டும். தமிழ் நாடும் தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் புத்துயிரும் புது வாழ்வும் பெறுமாறு மனமொழி மெய்களால் தொண்டு புரிதல் வேண்டும். நாடெங்கும், ஞாலமெங்கும் அன்பு பெருகி, அறம் வளர்ந்து, இன்பவாழ்வு சிறந்தோங்குவதற்குரிய கடமையைச் செய்தல் வேண்டும். அதற்குரிய அறிவும் திறமையும் பூமிதேவியின் தலைப் பிள்ளையான தமிழ்ப் பிள்ளையிடம் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்பது தமிழ்ச் சிதம்பரம் பிள்ளையின் தளராத நம்பிக்கையா யிருந்தது. அவரது நம்பிக்கையை நாம் உண்மையாக்க முயல்வோமாக.

—வந்தே மாதரம்!

நல்லாண்மை யென்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

சிதம்பரம் பிள்ளை
திரு நாமம் வாழ்க.

# அநுபந்தம்

## சிதம்பரனாரின் வழக்காறி வன்மை

(பரலி சு. ஷண்முகசுந்தரம் பிள்ளை எழுதியது)

சிதம்பரனார் பெரும்பான்மையும் கிரிமினல் வழக்குகளில் எதிரி பக்கமே வக்கீலாகத் தோன்றி வாதிப்பது வழக்கம். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதில் பிள்ளையார் சிறந்த நிபுணர். அவர் கூட இருந்து உதவிசெய்ய அநேகமாக ஆளே வேண்டியதில்லை. சமயோசிதமான கேள்விகள் கேட்பதில் அவருக்குச் சமமான வக்கீல் அந்தக் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் எவரும் இல்லை. சாட்சிகள் எவராயினும், அவரது குறுக்குக் கேள்விகளில் நிலைமாறி விடுவர். மறைத்துச் சொல்ல முடியாது. சாட்சிகள் தனக்கு அநுகூலமாகச் சொல்லாவிடினும் அதற்காக அவர் சிறிதும் மனம் தளரமாட்டார்.

சிதம்பரனார் நடத்திய ஒரு பெரிய கிரிமினல் வழக்கு இப்பொழுது எனக்கு நினைவில் இருக்கிறது. அது ஒரு கொலை வழக்கு. கொலை குலசேகர நல்லூரில் நடந்தது. கொலையுண்டவன் ஒரு ஆசாரி. பெரிய துஷ்டன்; பெண்களைக் கெடுப்பதில் பேர்பெற்ற பாதகன். அவனை ஒரு வைக்கோல் படப்புள்ள களத்தில் துரத்தி அடித்து, வேட்டையாடிக் கொலை செய்ததாக வழக்கு. அதில் எதிரிகள் எழுவர். ஆறு எதிரிகளும் முதலிலே அகப்பட்டுப் பல ஆண்டுகள் தண்டனை அடைந்தனர். முதலாவது எதிரி ஆறுமுகந் தம்பிரான். அவர் பேர் குற்றச்சாட்டுச் சீட்டில் அழகப்ப பிள்ளை

யென்று கண்டிருந்தது. குறித்த கொலை நடந்த வுடன் அவர் ஆறுமுகத் தம்பிரான் என்னும் பேருடன் சிதம்பரத்தில் உள்ள திருவாவடுதுறை ஆதீன மடத்துத் தலைவராய் விட்டார்.

1903-ம் ஆண்டு மே மாதத்தில்—கொலை நடந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், ஒட்டப் பிடாரம் தலைமைப் போலீஸ் கான்ஸ்டபிள் சிவசிதம்பரம் பிள்ளை யென்பவர் மணியாச்சி ஸ்டேஷனில் அவரைக் கைது செய்தார். கைதி ஒட்டப் பிடாரம் ஸப் ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட் டார். அந்தச் சமயம் ஒட்டப்பிடாரத்தில் ஸப் மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தவர் பஞ்சாபகேச ஐயர் பி. ஏ. பி. எல். என்பவர். கெட்டிக்காரர். லஞ்சப் பழக்கம் இல்லாதவரா யிருந்தால் ஒரு பெரிய உத்தி யோகத்தை அடைந்திருப்பார். அவர் வழக்குகளை விசாரிக்கும் பொழுது அவர் கருத்து இன்ன தென்பதை எவராலும் அறியமுடியாது. வாதி பக் கம் அநுகூலமாக இருப்பதுபோலக் காணப்படு வார். ஆனால் எதிரி பக்கம் தீர்ப்பு எழுதுவார். இந் தக் கொலை வழக்கு பஞ்சாபகேச ஐய ரிடம் விசாரணைக்கு வந்தது. சாட்சிக்காரர்களில் போலீசார் தவிர எல்லோரும், தம்பிரான் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவ ரல்ல ரென்று சொன் னார்கள். அவ்வா றிருந்தும் தம்பிரானை ஜாமீனில் விட சப் மாஜிஸ்ட்ரேட் மறுத்துவிட்டார். அதற் குக் காரணம் பல வாறாக அக்காலத்தில் சொல்லப் பட்டது. தம்பிரானுர் சிதம்பரனுருக்கு பந்து ; மைத் துனர் முறை. தவிர, பஞ்சாபகேச ஐயரை மற நெறியில் செல்லாது, அறநெறியில் ஒழுகுமாறு செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் இருந்தது. தம்

பிரான் வழக்கை நடத்தும் பந்து ஒருவர் சிதம்பர னரிடம் இந்த வழக்கை நடத்தும்படி தெரிவிக்க, சிதம்பரனர் ஒப்புக்கொண்டு, கலெக்டரிடம் மனுக் கொடுத்ததில் அவர் அதனைத் தூத்துக்குடி ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மாற்றிவிட்டார். அப் போது ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டாயிருந்த இ. எச். வாலஸ் (M A., I.C.S.) என்பவர் புதியம்புத்தூரில் மேற்படி வழக்கை விசாரணை செய்யத் தொடங்கினர். இரு பக்கம் கட்சிக்காரரும், சாட்சிகளும் பிறரும் சேர்ந்த கூட்டம் ஒரு திருவிழாப்போல இருந்தது. பிராசிக்கூஷன் பக்கம் மதுரை வக்கீல் ரெங்காச் சாரியாரும், நெல்லை வக்கீல் எஸ். பழனியாண்டி முதலியாரும் ஸ்பெஷல் பப்ளிக் பிராஸிக்கூட்டர் களாகத் தோன்றி வாதித்தனர். வாதி பக்கம் சாட்சி கள் விசாரிக்கப்பட்டனர். அவர்களை, சிதம்பரனர் குறுக்கு விசாரணையில் திணற அடித்தார். போலீஸார் கூடக் குறுக்கு விசாரணையில் தைரியமாகப் பதில் சொல்ல முடியவில்லை. ஒன்றிருக்க ஒன்றைச் சொன் னர்கள். வாலஸ் துரைக்கு வழக்கின் போக்கு தெரிந்து விட்டது. அப்போது வழக்கைக் கவனித்துக் கொண்டிருந்தார் ஒருவர். வயது முப்பது கூட ஆகாத இளைஞர். அவர்தான் உதவிப் போலீஸ் சூப்பரிண்டன்ட் பிளாக்ஸ்டோன். (சமீபத்தில் அவர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆக இருந்தார்.) அவர் தன்னை அறியாமலே சிதம்பரனரின் அஞ்சா நெஞ்சத்தையும், வாக்கு வன்மையையும் கண்டு வியந்து, சிதம்பரனரின் கையைப் பிடித்துக் குலுக் கித் தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். கொலை வழக்கு எதிரி பக்கம் சாட்சி விசாரணையில்லாமலே தள்ளுபடி செய்யப்பட்டது.

தம்பிரானும் விடுதலையடைந்தார். அந்தப் பிரபல கொலை வழக்கு விடுதலை சிதம்பரனாரின் புகழை அதிகமாகப் பரவச்செய்தது. தூய வெள்ளை நீறு அணிந்து, ஆகத்தில் அக்கமணி புனைந்து, சடைமுடித்த தம்பிரான் சுவாமிகள் தமக்கு நன்றி செய்த சிதம்பரனாருக்குச் சில ஆண்டுகளுக்குப் பின் சிதம்பரத்தில் ஒரு நல்விருந்தளித்தார். அப்பொழுது விருந்துண்டு மகிழ்ந்தவர்களில் அடியேனும் ஒருவன். மேலே சொன்ன வாலஸ் துரைமகனார் தான் சிதம்பரனாரது ராஜத்துவேஷ வழக்குகள் இரண்டிலும் 'கமிட்' செய்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஆவர். அப்பால் பல ஆண்டுகளுக்குப்பின் அவர் சென்னை உயர்தர மன்றத்து நீதிபதியாயிருந்து நீதி வழங்கினார். சிதம்பரனார் சிறைக்கோட்டமிருந்து விடுதலை அடைந்த பின்னர், மீண்டும் வழக்கறிஞர் பதவி அளிக்க வேண்டுமென்று மனுச் செய்தபொழுது, அதனை அன்புடன் ஆதரித்தவரும் சிபார்சு செய்தவரும் வாலஸ் துரை மகனார் ஆவார். அவர் பேரைப் பிள்ளை தமது மைந்தர்களில் ஒருவருக்கு இட்டு என்றும் மறவாத தமது நன்றியைச் செலுத்தினர் என்பது இங்கு குறிக்கத்தக்கதாகும்.

## விஞ்சுதுரை—சிதம்பரம் பிள்ளை சம்வாதம்

(திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டராயிருந்த விஞ்சுதுரை
சிதம்பரம் பிள்ளையை நோக்கிக் கூறியதாக ஸ்ரீ சுப்ரமணிய
பாரதியார் பாடியது)

தண்டகம் ஆதி தாளம்

1

நாட்டில் எங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய் கனல் மூட்டினாய்
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி காட்டுவேன் (நாட்)

2

கூட்டம் கூடி வந்தே மாதரம் என்று
கோஷித்தாய் எமை தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் பொருள் ஈட்டினாய் (நாட்)

3

கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய் சட்டம் மீறினாய்
ஏழைப் பட்டிங் கிரத்தல் இழிவென்றே
யேசினாய் வீரம் பேசினாய் (நாட்)

4

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய் புன்மை போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய் ஆசை ஊட்டினாய் (நாட்)

5

தொண்டொன்றே தொழிலாக் கொண்டிருந்தோரைத்
தூண்டினாய் புகழ் வேண்டினாய்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய் சோர்வை ஓட்டினாய் (நாட்)

6

எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய் வித்தை தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ நீங்கள் உய்யவோ (நாட்)

7

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன் குத்திக் கொல்லுவேன்
தட்டிப் பேசுவோர் உண்டோ சிறைக்குள்ளே
தள்ளுவேன் பழி கொள்ளுவேன் (நாட்)

---

## விஞ்சு துரைக்குச் சிதம்பரம் பிள்ளை பதில்

1

சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ தெய்வம் பார்க்குமோ (சொந்த)

2

வந்தே மாதரம் என்றுயிர் போம் வரை
வாழ்த்துவோம் முடி தாழ்த்துவோம்
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ அவ மானமோ ? (சொந்த)

3

பொழுதெலாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ நாங்கள் சாகவோ ?
அழுது கொண் டிருப்போமோ ஆண் பிள்ளைகள்
அல்லவோ ? உயிர் வெல்லமோ ? (சொந்த)

4

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
    நாய்களோ பன்றிச் சேய்களோ ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ ? இது
    நீதமோ பிடி வாதமோ (சொந்த)

5

பாரதத் திடை அன்பு செலுத்துதல்
    பாபமோ ? மனஸ் தாபமோ ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
    குற்றமோ இதில் செற்றமோ ? (சொந்த)

6

ஒற்றுமை வழி ஒன்றே வழியென்பது
    ஓர்ந்திட்டோம் நன்கு தேர்ந்திட்டோம்
மற்றும் நீங்கள் செயும் கொடுமைக் கெலாம்
    மலைவுறோம் சித்தம் கலைவுறோம் (சொந்த)

7

சதையைத் துண்டு துண் டாக்கினு முன்னெண்ணம்
    சாயுமோ ? ஜீவன் ஓயுமோ ?
இதயத் துள்ளே யிலங்கும் மகாபக்தி
    யேகுமோ ? நெஞ்சம் வேகுமோ ? (சொந்த)

---

## 38

# தொண்டு செய்யும் அடிமை

(சுயராஜ்யம் வேண்டுமென்ற இந்தியனுக்கு அக்காலத்து இந்தியா மந்திரியாக இருந்த லார்ட் மார்லி கூறியதாக ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் பாடியது)

(மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளோ என்ற பாட்டின் மெட்டு)

1

தொண்டு செய்யும் அடிமை உனக்குச்
சுதந்தர நினைவோடா?
பண்டு கண்ட துண்டோ அதற்குப்
பாத்திரம் ஆவாயோ? (தொண்டு)

2

ஜாதிச் சண்டை போச்சோ? உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய் கண்முன்
நிற்கொணாது போடா (தொண்டு)

3

அச்சம் நீங்கினாயோ அடிமை
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும் ஆசை
பேணுதல் ஒழித்தாயோ? (தொண்டு)

4

கப்பல் ஏறுவாயோ? அடிமை
கடலைத் தாண்டுவாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே அடிமை
கொற்றத் தவிசும் உண்டோ? (தொண்டு)

5

ஒற்றுமை பயின்றாயோ-அடிமை
உடம்பில் வலிமை உண்டோ?
வெற்றுரை பேசாதே-.அடிமை
வீரியம் அறிவாயோ? (தொண்டு)

6

சேர்ந்து வாழுவீரோ-உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ-உங்கள்
சோம்பரைத் துடைத் தீரோ ? (தொண்டு)

7

வெள்ளை நிறத்தைக் கண்டால்-பதறி
வெருவலை ஒழித்தாயோ ?
உள்ளது சொல்வேன் கேள்-சுதந்தரம்
உனக்கில்லை மறந்திடடா ? (தொண்டு)

8

நாடு காப்பதற்கே-உனக்கு
ஞானம் சிறிதும் உண்டோ ?
வீடு காக்கப் போடா-அடிமை
வேலை செய்யப் போடா ! (தொண்டு)

9

சேனை நடத்து வாயோ ?-தொழும்புகள்
செய்திட விரும்பு வையோ ?
ஈனமான தொழிலே-உங்களுக்கு
இசைவதாகும் போடா ! (தொண்டு)

MADRAS-1

## ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் முகஉருவச் சிலையைச் சென்னைக் காங்கிரஸ் மாளிகையில் 21-12-39 வியாழன் மாலை டாக்டர் ராஜன் திறந்து வைத்த பொழுது பரலி. சு. நெல்லையப்பர் பாடிய பஞ்சகம்

### அறுசீர் விருத்தம்

**1**

இதம்பெற நாட்டாரெல்லாம் எண்ணரும் தியாகம் செய்தாய்
விதம் பெறும் இன்னல் நீங்கி விடுதலை யெய்தி நாடு
பதம்பெறப் பெரிதும் நாடிப் பரிவுடன் தொண்டு செய்தாய்
சிதம்பரப் பெரியோய்! உன்றன் சீரினைப் போற்றுகின்றோம்.

**2**

நாட்டினில் வணிகம் ஓங்கி நல்லன பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள் உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய், புன்மையர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் போட்டும் மனம்தள ராது நின்றாய்.

**3**

தமிழகம் வாழத் தொன்மைத் தமிழ் மொழி சிறக்க நல்ல
தமிழ் நூல்கள் இயற்றித் தந்தாய் தமிழ்க் குறள் போற்றி நின்றாய்
தமிழர்கள் புதுவாழ் வெய்தித் தலைமைபெற் றோங்கு மாறு
தமிழர்கள் தலைவா, நாளும் தளர்விலா துழைத்தல் செய்தாய்.

**4**

ஊக்கமும் வலியும் குன்றி, ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத் துயிலெழச் செய்தாய் ஐய!
பாக்கியம் பெருகி நாட்டார் பாரினில் உயரும் வண்ணம்
தூக்கிய வினைகள் செய்தாய் துணிவு மிக் குடைய கோவே.

**5**

பொற்சிலை வைத்திங் குன்னைப் போற்றிட விரும்பு கின்றோம்
கற்சிலை நாட்டி யின்று காண்கின்றோம் கலைவ லோனே
நற்செயல் பெரிதும் செய்தாய் நாட்டினை அகத்திற்கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும் ஞாலமுள் ளளவும் வாழி.

## ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்மீது

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை பாடியது

### விருத்தம்

1

மடமை யதோ பிறநாட்டார் மயக்கந் தானே
மக்க ளெல்லாம் சுதந்தரத்தை மறந்தா ராகி
அடிமை யிருள் உற்றிரவாய் அகன்று மூடி
யாரும் தலை நீட்டவொண்ணு அந்த நாளில்
திடமனத்துச் சிதம்பரப் பேர்ப் பிள்ளையார்தான்
செய் திருக்கும் சேவையெலாம் சிந்தை செய்தால்
உடல் சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்து உணர்ச்சி பொங்கும்
உள்ள மெலாம் நெக்குநெக்காய் உருகு மன்றே.

2

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்போர்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெலாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளன் சிதம்பரனுர் சிறையில் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவர்க்கும் கண்ணீர் கொட்டக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்

3

சாதிகுலம் சமயமெலாம் கடந்த தக்கோர்
சமரசமாம் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிறுவிய நம் காங்கிரஸை நிதமும் போற்றிப்
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்த போதும்
பெரியசபை அதையிகழ்ந்து பேசா நேசன்
ஓதியதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம்

4

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலா மென்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினல் தலைவ ராகிக்
காங்கிரஸை நடத்தியதைக் கண்டு நொந்து
தேசநலம் தியாகமின்றி வருமோ என்று
திலகர்பிரான் செய்தபெருங் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்தபல பெரியோர் தம்முள்
உண்மை மிக்க சிதம்பரமும் ஒருவனுவன்.

5

உழுதுபல தொழில்செய்திங் குழைப்போ ரெல்லாம்
உணவுடைவீ டின்றியே உருகி வாடப்
பழுதுமிக அந்நியர்க்குத் தரக ராகிப்
பசப்புகின்ற வினருக்கோ சுகங்க ளென்று
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டு
அந்நாளில் சிதம்பரனர் இட்ட வித்தாம்
விழுதுபல விட்டுப்பெரு மரமா யின்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் கண்டோம்.

6

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்டும்
கறுப்பெனினும் சிரித்தமுகம் இனிமை காட்டும்
குள்ளமெனும் ஒருவடிவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த மணமே வீசும்
சொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்வாம்.

## 43

### வீரச் சிதம்பரம்

புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தாசிரமவாசி
சுவாமி சுத்தானந்த பாரதியார் 20-12-39-ல் எழுதியது.

சுதேசி இயக்கச் சக்கரத்தைச் சுழற்றி, தேசாவேச மின்சாரத்தைத் தமிழர் உள்ளத்தில் பாய்ச்சினார் நம் சிதம்பரம் பிள்ளை. அவரைச் சுமார் பதினொன்கு ஆண்டுகட்கு முன் கடைசி முறையாகச் சந்தித்துப் பேசியபோது, “ஒரு குறள் சொல்லுகிறேன், கேளுங்கள்: விழுப் புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்கும் தன் நாளை யெடுத்து. அந்தமாதிரி உணர்ச்சி என்னுள் ததும்புகிறது. மனம் தூண்டுகிறது. சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உணவை மறந்தாலும் என் குருநாதர் உபதேசித்த தேசப் பணியை மறக்கமுடியவில்லை” என்றார்.

திலகரை அவர் தம் குருவாகக் கருதி நின்றார். அவர் சிலை காங்கிரஸ் மண்டபத்தில் இருந்து அதைப் பார்க்கும் ஜனங்களுக்கெல்லாம் தேசபக்தியைப் பேசாமல் பேசிப் புகட்டி நிற்கும். அவ்வளவு கம்பீரமான வீரர் நம் சிதம்பரம் பிள்ளை. ஐயர், பாரதியார், சிதம்பரம் பிள்ளை மூவரும் திரிசூலங்கள். இவர்கள் நம் தமிழர்களுக்குப் புதிய வாழ்வை அளித்தவர்கள். அவர்களைக் கௌரவிப்பது பாரத மாதாவையே கௌரவிப்பதாகும். அடியில் வரும் கும்மியை அன்புக் காணிக்கையாகக் கொள்க.

## கும்மி

**1**

வீரச் சிதம்பரம் பிள்ளை யென்றால்—நெஞ்சில்
விம்முறு தேசாபி மானக் கனல்
தீரன் சுதந்தரத் தீவளர் செந்தமிழ்ச்
சிங்கம் அவன் பெயர் வாழியவே. (வீரச்)

**2**

பாரத நாட்டு விடுதலைக்கே—வாழ்வைப்
பலி கொடுத்த வீர னவன்
ஓராயிரம் கோடி இன்னல்கள் வந்தாலும்
ஓடியா நெஞ்சுரம் ஓங்கி நின்றான் (வீரச்)

**3**

வீர சுதந்தரக் கப்பலை முன்முன்னே
விரைந்து செலுத்திய மீகா னவன்
கோரக் கொடுஞ்சிறை தாங்கிப் பொதுநலக்
கொள்கைக் குயிர்தந்த வள்ள லவன் (வீரச்)

**4**

அச்சத்தைப் போக்கி அடிமைத் தளைகளை
அறுத் தெறிந்து தலை நிமிர்வோம்
இச்சைப் படிக்கு நாம் இன்புற வாழுவோம்
இன்றே சிதம்பரம் ஆகி நிற்போம். (வீரச்)

ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்கள் கோயமுத்தூர்ச் சிறைக் கோட்டத்தில் இருந்த பொழுது, புதுவையிலிருந்து அவரைக் காணச் சென்ற பரலி சு. நெல்லையப்பரிடம் ஸ்ரீமான்

சுப்ரமணிய பாரதியார் மூன்று அழகிய பாடல்களை எழுதி அனுப்பினார். மூன்றில் ஒன்று மட்டுமே கிடைத்திருக்கிறது. இது பாரதியாரின் அக்கால மனப்பான்மையை விளக்குவதாகும்.

வேளாளன் சிறை புகுந்தான்,
　　தமிழகத்தார் மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதை விரைவில் கேட்பாய் நீ,
　　வருந்தலையென் கேண்மைக் கோவே
தாளாண்மை சிறிது கொலோ
　　யாம்புரிவோம்? நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி
வாளாண்மை நின் துணைவர் பெறுகெனவே
　　வாழ்த்துதி நீ வாழ்தி வாழ்தி.

திருவாளர் சிதம்பரனார் சிறைக் கோட்டத்திலிருந்து திரும்பி வந்தபொழுது, அவரை வரவேற்கும் முறையில் ஸ்ரீ ராமபிரான் வனவாசத்திலிருந்து திரும்பி வந்தபொழுது அயோத்தி நகர மக்கள் அவரை வரவேற்ற முறையில் கம்பர் பாடிய மூன்று அழகிய பாடல்களை ஸ்ரீமான் பாரதியார் எழுதி அனுப்பினார். கவிச் சக்ரவர்த்தியான கம்பர் பாடல்களில் சிறந்த பாடல்களான அந்தப் பாடல்கள் பாடிப் பாடி மகிழ்தற்குரியன.

*1*

தாயருக் கன்று சார்ந்த கன்றெனும் தகையன் ஆனாய்
மாயையில் பிரிந்தோர்க் கெல்லாம் மனோலயம் வந்ததொத்தாய்
ஆய் வளையார்க்குக் கண்ணுள் ஆடிரும் பாவை ஒத்தாய்
நோய் வறுத்துலர்ந்த யாக்கைக்(கு) உயிர் புகுந்தாலும்
ஒத்தாய்.

2

ஆவி யிக் குன்னலால்வே றின்மையால் ஐய எங்கள்
காவியங் கழனி நாடும் யாங்களும் கலந்து வாழும்
மாவியல் ஒண் கணாரும் வள்ளல்நீ வருத லாலே
ஓவியம் உயிர்பெற் றாலே பெற்றனம் உணர்வு பெற்றோம்

3

எளிவரும் உயிர்கட் கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்ததொத்தாய்
அளிவரும் மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமிழ்தம் ஆனாய்
ஒளிவரப் பிறந்த தொத்தாய் உலகினுக்(கு) ஒண்க ணார்க்குத்
தெளிவுறு களிப்புச் செய்யும் தேம்பிழி தேறல் ஒத்தாய்

---

60

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1